

விருதுநகர் மாவட்டம் , இராஜபாளையத்தில் பிற்படுத்தப்பட்டோர் , மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் , மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் மற்றும் சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் செயலர் வா.சம்பத் , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் , இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் , சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் சீர்மரபினர் நல வாரியத் துணைத்தலைவர் இராசா அருண்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 2100 பயனாளிகளுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டைகள் மற்றும் 84 பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் என மொத்தம் 2184 பயனாளிகளுக்கு ரூ .21.42 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் .

## மாதவரத்தில் நல உதவிகள்!

சென்னை, ஜூன் 25 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 17வது வட்டம் தீயம்பாக்கம் டீ கப் மினிஸ்ட்ரிஸ் முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு, மதிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, வட்டக் கழக நிர்வாகி கள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர் டி. திவாகர், எம். ஜான்சன், இ. சுதர்சன், எஸ். ஜோசப் ஜி. பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு அறுசுவை பிரியாணி மற்றும் அத்தியாவசிய பொருட்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.



சென்னை, தியாகராய நகரில், நேற்று (24.06.2025) கவியரசு கண்ணதாசன் அவர்களின் 99வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், கவியரசு கண்ணதாசன் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டத்தில்

# இளைஞர் அணி சார்பில் தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.இலட்சுமணன் அறிவிப்பு!

விழுப்புரம், ஜூன் 25 -

விழுப்புரம் ( மத்திய ) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ அவர்களின் அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி

விழுப்புரம் ( மத்திய ) மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு கால சாதனைகளை விளக்க தெருமுனைப் பிரச் சார கூட்டங்கள் வரும் 27.06.2025 வரை நடைபெறுகிறது.



25.06.2025 அன்று வானூர் கிழக்கு ஒன்றியம் ( பேச்சாளர்கள் வளவனூர் ப.அன்பரசு, ந.அப்துல் வகாப் அதாயி ), வானூர் மத்திய ஒன்றியம் (பேச்சாளர்கள் வளவனூர் ப.அன்பரசு, ந.அப்துல் வகாப் அதாயி ) கோட்டக்குப்பம் நகரம்

( பேச்சாளர்கள் வளவனூர் ப.அன்பரசு, ந.அப்துல் வகாப் அதாயி ) விழுப்புரம் நகரம் மேற்கு ( பேச்சாளர்கள் முருக்கம் முனுசாமி , கே.அஸ்வின் குமார்) கோலியனூர் மத்திய ஒன்றிம் ( பேச்சாளர்கள் முருக்கம் முனுசாமி, அஸ்வின் குமார்) ஆகிய ஒன்றியங்களிலும்

26. 06. 2025 அன்று கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம் ( பேச்சாளர்கள் துரை மணிவேலன், அஸ்வின் குமார்) வானூர் மேற்கு ஒன்றியம்( பேச்சாளர்கள் துரை மணிவேலன், அஸ்வின் குமார் ) , கோலியனூர் கிழக்கு ஒன்றியம் (பேச்சாளர்கள்வே.விக்ரமன், ந.அப்துல் வகாப் அதாயி) வளவனூர் பேரூர் (பேச்சா ளர்கள் வே விக்ரமன் , ந.அப்துல் வகாப் அதாயி) ஆகிய இடங்களிலும்

27.06.2025 அன்று கிளியனூர் கிழக்கு ஒன்றியம் ( பேச்சாளர்கள் துரை மணிவேலன், த.இன்ப குமரன்), கிளியனூர் மேற்கு ஒன்றியம் ( பேச்சாளர்கள் துரை மணிவேலன் த.இன்பகுமரன் ) , கோலியனூர் தெற்கு ஒன்றியம் ( பேச்சாளர்கள் வே.விக்ரமன் எ.கீர்த்தனா)

கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம் (பேச்சாளர்கள் வே.விக்ரமன், எ.கீர்த்தனா ஆகிய இடங்களில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடைபெறுகிறது.

இக்கூட்டங்களில் மாநில , மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், ஜூன் 25 -

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு :-



விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு கால சாதனைகளை விளக்கிடும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங் கள் 25-06-2025 முதல் 30-06-2025 வரை நடைபெற உள்ளது.

கழக மண்டல பொறுப்பாளர் -வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி ஆகியோர் சிறப்புரை யாற்ற உள்ள இக்கூட்டங்களுக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமை ஏற்க உள்ளார்.

25-06-2025 இன்று திருக்கோவிலூர் கிழக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) மற்றும் விக்கிர வாண்டி கிழக்கு (பேச்சாளர்கள்-காசி.விஸ்வநாதன், வே.வல்லபராசு) ஒன்றியங்களிலும்,

26-06-2025 அன்று மணம்பூண்டி ஒன்றியம் ( பேச்சாளர்-யாசர் அராபத்), அரகண்டநல்லூர் பேரூர் (பேச்சா ளர்-சேர்க்காடு கென்னடி) காணை வடக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) ஒன்றியங்களிலும்,

27-06-2025 அன்று காணை தெற்கு (பேச்சாளர்-எழும்பூர் கோபி) திருவெண்ணெய் நல்லூர் பேரூர் (பேச்சாளர்-அப்துல் வகாப்) ஆகிய இடங்களிலும்,

28-06- 2025 அன்று காணை மத்திய (பேச்சாளர்-எழும்பூர் கோபி), முகையூர் வடக்கு (பேச்சாளர்-இன்பகுமரன்), திருக்கோவிலூர் நகரம் (பேச்சாளர்கள்-கீர்த்தனா, வி.ஆர்.ரவிச்சந்திரன்), விக்கிரவாண்டி பேரூர் (பேச்சாளர்கள்-கே.அஸ்வின் குமார், ப.அன்பரசு) ஆகிய இடங்களிலும்,

29-06-2025 அன்று விக்கிரவாண்டி மேற்கு (பேச்சாளர்-ஆரணி மாலா), திருவெண்ணெய் நல்லூர் மேற்கு (பேச்சாளர்-தூத்துக்குடி சரத்பாலா), கோலியனூர் மேற்கு (பேச்சாளர்கள்-ரோஜா, காசி.கலைச்செல்வன்) ஆகிய இடங்களிலும்,

30-06-2025 அன்று முகையூர் தெற்கு (பேச்சாளர்-சேலம் சுஜாதா), விக்கிரவாண்டி மத்திய (பேச்சாளர்-சிறுவானூர் பரசுராமன்) ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர் - மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் - மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அப்துல் சலாம், டி.செல்வராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருக்கும் இக்கூட்டங்களில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டபம் வடக்கு கடற்கரை பகுதியில் இருந்து மீன்பிடிக்க சென்ற விசைபடகு ஒன்று கவிழ்ந்தது இதில் மண்டபம் சேதுநகரைச் சேர்ந்த சீனி இபிராம்சா (வயது 40) கடலில் மூழ்கி மாயமான நிலையில் இறந்து உடல் கரை ஒதுங்கப்பட்ட செய்தி அறிந்து அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து தனது சொந்த நிதியை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழங்கினார். மேலும் விரைவில் தமிழ்நாடு முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்று முதலமைச்சர் நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் மற்றும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் புதூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மேலநம்பி புரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் சஞ்சய், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி உரையாற்றினார்கள். உடன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் உதயகுமார், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக்குமார், பாலமுருகன், கடற்கரை செல்வம், முனியசாமி மாடசாமி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பிரதீப், ஜெயக்குமார் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், செல்வராஜ், சின்னமாரிமுத்து, நவநீதக்கண்ணன், இம்மானுவேல் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அழகு நீலமேகம் அவர்கள் வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு ள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், அழகு நீலமேகம் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; பெரம்பலூர் மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு டி.கே.இராமச்சந்திரன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**
திரு. **டி.கே.இராமச்சந்திரன்,**
4/121, பீல்வாடி, சித்தளி அஞ்சல்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018,
நாள் : 24.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### வேலூர் மாநகருக்கு இன்று வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., அறிக்கை!

வேலூர், ஜூன் 25 –

வேலூர் மாநகருக்கு இன்று வருகை தரும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவரும், திராவிட மாடல் அரசின் முதல்வரும், ஏழை எளிய அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் நாள்தோறும் திட்டங்களை தீட்டி அதன் மூலம் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் முதல் முதல்வராக செயல்பட்டு வருகிறார் என்று.. நாளேடுகள் பாராட்டும் வகையில் செயல்பட்டு வரும் 8 கோடி தமிழர்களின் நெஞ்சங்களில் குடியிருக்கும் முதல்வரும் கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.06.2025 புதன்கிழமை) வேலூர் மாநகருக்கு வருகை தந்து, 198 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்தை திறந்து வைக்க வருகை தர உள்ளார்.

எனவே, அவரை வரவேற்கும் வகையில் வேலூர் மாநகர திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் எழுச்சி மிக வரவேற்பை கீரின் சர்கிள் முதல் பயணியர் மாளிகை வரை இரு வண்ண கொடி மற்றும் பதாகைகள் கையில் ஏந்தி வேலூர் மாநகர மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் மேலும் மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொது



குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் என அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

## பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.ஜெயராமன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், அப்பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.** "என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கு வீ.சு.வீரபாண்டியன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,


**கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளராக,**
**திரு.வீ.சு.வீரபாண்டியன்,**
1/1, அண்ணா குடில், கெடிலம்,
திருநாவலூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 607 204 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018,
நாள் : 24.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி.பி. சோமசுந்தரம்
### ஜூன் 25 (1971)



**கழகத்தின் முதுபெரும் தலைவர். "பட்டாளத்துச் சிங்கம்" எனவும், "சேலத்துப் பெரியார்" எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.**

**கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**